**கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம், இலங்கை**

# வெற்றிடங்கள்

கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்காக தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து 2026 செப்டெம்பர் 23ஆம் திகதி வரை விண்ணப்பங்களை அழைக்கிறது.

**பதவிகள்** : சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/II, விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதவர்)/ விரிவுரையாளர் (தகுதிகாண் காலம்)

**தகைமைகள் :** மேலதிக தகவல்களுக்கு கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழக இணையதளத்தைப் பார்க்கவும் (https://gwu.ac.lk/).

| பிரிவு | சிறப்புத் துறைகள் | குறிப்புகள் |
|---|---|---|
| சுதேச சமூகவியல் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடம் | | |
| 1. சுதேச சமூகவியல் பிரிவு | மானுடவியல்<br>சமூகவியல்<br>புவியியல் | முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்புடன் கூடிய சான்றிதழ் பெற்ற கலை மாணி சிறப்புப் பட்டம் / கௌரவப் பட்டம் அல்லது சுதேச அறிவு சமூகக் கற்கையின் விஞ்ஞானமாணி கௌரவப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>சிறப்புத் துறைகளில் ஏதேனும் ஒன்றில் கலாநிதிப் (PhD) பட்டம் பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| சுதேச சுகாதார விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பீடம் | | |
| 1. சுதேச மருத்துவ வளங்கள் பிரிவு | மருந்தியல், மருந்தாக்கல் தொழினுட்பம், மருந்தாக்கல் தர உறுதிப்பாடு, விதிமுறைகள் சட்டம், மருந்து பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் நஞ்சுவியல் | மருந்தாக்கவியலில் BSc அல்லது B.Pharm பட்டத்தில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பில் சிறப்பு/கௌரவப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>சிறப்புத் துறைகளில் ஏதேனும் ஒன்றில் கலாநிதிப் (PhD) பட்டம் பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| | மூலிகை பயிர்ச்செய்கை மற்றும் வர்த்தகமயமாக்கல், டிஜிட்டல் விவசாயம், ஸ்மார்ட் விவசாயத் தொழினுட்பங்கள், காலநிலை மற்றும் நிதியியல் மற்றும் விவசாய வியாபாரம் | அபேட்சகர் விவசாயம் தொடர்பான BSc பட்டம்/ விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான BSc பட்டம் சகிதம் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் சிறப்பு/கௌரவப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>சிறப்புத் துறைகளில் ஏதேனும் ஒன்றில் கலாநிதிப் (PhD) பட்டம் பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| | மருத்துவ வளங்களில் மல்டி-ஓமிக்ஸ் (Multi-omics), விவசாய-தகவலியல், உயிரியல்தொழினுட்பம் மற்றும் கணிப்பீட்டு உயிரியல், பயிர் அறிவியல், இயற்கை விவசாயம், பயிர் விஞ்ஞானம், விவசாய சூழலியல் | அபேட்சகர் விவசாயம் தொடர்பான BSc பட்டம்/ விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான BSc பட்டம் சகிதம் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் சிறப்பு/கௌரவப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>சிறப்புத் துறைகளில் ஏதேனும் ஒன்றில் கலாநிதிப் (PhD) பட்டம் பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 2. சுதேச சுகாதார விஞ்ஞானப் பிரிவு | யோகாசனப் பயிற்சி (அடிப்படை முதல் உயர்மட்டம் வரை), யோகாசனங்களின் சிகிச்சை பயன்பாடு, மேம்பட்ட பிராணாயாமம், தியானம் மற்றும் விழிப்புணர்வுப் பயிற்சிகள் | அபேட்சகர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை (BAMS) இளமாணிப் பட்டம் அல்லது யோகாசனம் தொடர்பான துறையில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்திருப்பது அவசியமாகும்.<br>பட்டப் பின்படிப்புத் தகுதிகள் மேலதிக நன்மையாகக் கருதப்படும்.<br>யோகாவில் பொருத்தமான துறைசார் மற்றும் நடைமுறை அனுபவம் கட்டாயமாகும்.<br>அடிப்படை முதல் உயர்மட்டம் வரையிலான யோகாசனங்களைச் செய்வதிலும் கற்பிப்பதிலும் நிபுணத்துவம் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். |
| | உடற்கூறியல் மற்றும் உடலியங்கியல், ஆயுர்வேதக் கோட்பாடுகள் மற்றும் சிகிச்சைகள், இயற்கை மருத்துவம், ஸ்வஸ்தவிருத்தா, பஞ்சகர்ம சிகிச்சை பயன்பாடுகள், ஆயுர்வேத உணவு முறை மற்றும் ஊட்டச்சத்து | அபேட்சகர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை (BAMS) துறையில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்திருப்பது அவசியமாகும்.<br>சிறப்புத் துறைகளில் ஏதேனும் ஒன்றில் கலாநிதிப் (PhD) பட்டம் பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| | சுற்றுலா முகாமைத்துவம், விருந்தோம்பல் முகாமைத்துவம், சுகாதார சுற்றுலா, சுகாதார சேவை முகாமைத்துவம், சுகாதாரப் பொருளாதாரம், சுகாதாரப் பராமரிப்பு முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சுற்றுலா முகாமைத்துவம், விருந்தோம்பல் முகாமைத்துவம் அல்லது நிகழ்வு முகாமைத்துவம் ஆகியவற்றில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு BBM/BBA/BSc பட்டம் பெற்றிருக்க வேண்டும்.<br>சிறப்புத் துறைகளில் ஏதேனும் ஒன்றில் கலாநிதிப் (PhD) பட்டம் பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |

**சம்பள அளவு**

அ) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I - ரூ. 160,520 – 7x3,900 - 187,820 மாதத்திற்கு [U-AC 3(I)], ஆரம்பத்தில் ரூ. 160,520.00 மாதாந்த சம்பள அளவில் அமர்த்தப்படுவர். சம்பளத்தில் 116% கல்விக் கொடுப்பனவு + 2,200.00 ரூபா வழங்கப்படும்.

ஆ) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II - ரூ. 138,980 – 11x2,940 - 171,320 மாதத்திற்கு [U-AC 3(II)], ஆரம்பத்தில் ரூ. 138,980.00 மாதாந்த சம்பள அளவில் அமர்த்தப்படுவர். சம்பளத்தில் 116% கல்விக் கொடுப்பனவு + 2,100.00 ரூபா வழங்கப்படும்.

இ) விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதவர்) - ரூ. 121,340 - 5x2,940 - 136,040 மாதத்திற்கு [U-AC 3(III)], ஆரம்பத்தில் ரூ. 121,340.00 மாதாந்த சம்பள அளவில் அமர்த்தப்படுவர். சம்பளத்தில் 102% கல்விக் கொடுப்பனவு + 1,800.00 ரூபா வழங்கப்படும்.

ஈ) விரிவுரையாளர் (தகுதிகாண் காலம்) - ரூ. 94,400 - 10x2,400 - 118,400 மாதத்திற்கு [U-AC 3(IV)], ஆரம்பத்தில் ரூ. 94,400.00 மாதாந்த சம்பள அளவில் அமர்த்தப்படுவர். சம்பளத்தில் 91% கல்விக் கொடுப்பனவு + 1,200.00 ரூபா வழங்கப்படும்.

- ➢ சம்பளம் மற்றும் கல்விக் கொடுப்பனவுகள் 01.04.2025ஆம் திகதிய 02/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் வழங்கப்படும்.
- ➢ மேற்கண்ட சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
- ➢ மேற்கண்ட விகிதங்கள் அரசாங்க விதிமுறைகளுக்கு அமைவாக மாற்றத்திற்கு உட்பட்டவை.

**நன்மைகள்:**

- ➢ தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தமது மாதாந்த சம்பளத்தில் 10% தொகையை பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதிக்கு (UPF) பங்களிப்பார்கள் அத்தோடு பல்கலைக்கழகம் சம்பளத்தில் 15% பங்களிக்கும். அதில் 8% ஓய்வூதிய நிதிக்கும் 7% சேமலாப நிதிக்கும் வரவு வைக்கப்படும். மேலதிகமாக, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) பல்கலைக்கழகம் 3% பங்களிக்கும்.
- ➢ 1983 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் விதிகளுக்கு அமைவாக பணிக்கொடை வழங்கப்படும்.
- ➢ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளை வகிப்பவர்கள், 7 வருட சேவையை முடித்த பிறகு முழுச் சம்பளத்துடன் கூடிய 1 வருட ஓய்வுகால (Sabbatical) விடுமுறைக்கு அல்லது சம்பளமில்லாத 2 வருட விடுமுறைக்கு தகுதியுடையவர்கள். மேலும், விடுமுறை காலத்தில் வெளிநாடு செல்பவர்கள் தமக்கும் தங்களது துணைவருக்கும் முழுமையான விமானக் கட்டணத்தைப் பெறத் தகுதியுடையவர்கள்.

**விண்ணப்பிக்கும் முறை:**

- ➢ பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து (https://gwu.ac.lk/) (பல்கலைக்கழக ஆணைக்குழுவின் 721ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் திருத்தங்களின் பிரகாரம்) தகைமைகளைச் சரிபார்க்கவும். விசாரணைகளுக்கு: பிரதிப் பதிவாளர், கல்வி நிறுவனப் பிரிவு (033-2215827/drae@gwu.ac.lk) அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ➢ அதிகாரபூர்வ நிகழ்நிலை இணையதளத்தில் (Online Portal) விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை நேரடியாகப் பதிவேற்றவும். குறிப்பு: நீங்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி நிகழ்நிலை விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- ➢ தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்கள/ நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும். நிறுவன ரீதியிலான தாமதம் ஏற்படும் பட்சத்தில், தகுதியை உறுதிப்படுத்த இறுதித் திகதிக்கு முன்னர் பிரதி (Advance Copy) ஒன்றை அனுப்ப வேண்டும்.
- ➢ பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தை அச்சிட்டு, கையொப்பமிட்டு, தேவையான இறப்பர் முத்திரைகளைப் பதிக்கவும். அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவம் மற்றும் சான்றளிக்கப்பட்ட சான்றிதழ் பிரதிகளைப் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:
- ➢ பிரதிப் பதிவாளர், கல்வி நிறுவனங்கள் பிரிவு, இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், கண்டி வீதி, யக்கல.
- ➢ கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாக எழுதவும்.
- ➢ நிகழ்நிலை விண்ணப்ப சமர்ப்பிப்பு மற்றும் தபால் மூல ஆவணங்கள் அனைத்தும் 2026 செப்டெம்பர் 23ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பல்கலைக்கழகத்திற்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். முழுமையற்ற தாமதமான அல்லது தவறான வடிவத்தில் உள்ள விண்ணப்பங்கள் தானாகவே நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
**கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை**
**கண்டி வீதி, யக்கல,**
**2026 ஆகஸ்ட் 25.**